This Question Paper consists of 31 questions and 8 printed pages.
8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

Roll No. | | | | | | | | | | | | | Code No. **51/S/O/TM**

Set **A**

# TAMIL

# தமிழ்

# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி :

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் :

1. ____________________

2. ____________________

---

**I பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைதாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கபடாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் **Code** எண் **51/S/O/TM** விடைத்தாளில் எழுதுங்கள்.

**பொதுக்குறிப்பு :**

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL

# தமிழ்

# (237)

கால அளவு : **3** மணி நேரம் ]  [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு :** (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) வினாக்களை நன்கு புரிந்து கொண்டு விடையளிக்க.

(3) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

**பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.** **1x11=11**

**1.** கற்பதனால் ஏற்படும் பயன் யாது?

(A) செல்வம் சேரும் (B) பிற நாடும் ஊரும் சொந்தமாகும்

(C) உயர் பதவி வகிக்கலாம் (D) எழுத்துகளை அறியலாம்

**2.** கங்கை நதிக்கரையில் மிகுதியாக விளையும் பயிர் :

(A) கோதுமை (B) நெல் (C) சோளம் (D) வரகு

**3.** உண்டி என்னும் சொல்லின் பொருள் :

(A) வயிறு (B) உணவு (C) செல்வம் (D) உடை

**4.** அடக்கத்துடன் இருப்பவர் :

(A) செல்வம் நிறைந்தவர் (B) அழகு நிறைந்தவர்

(C) அறிவு நிறைந்தவர் (D) வறுமை நிறைந்தவர்

5. புனல் என்ற சொல்லின் பொருள் :

(A) கனல் (B) தணல் (C) நீர் (D) கடல்

6. காந்தி தென்னாப்பிரிக்காவிற்கு எந்த ஆண்டு சென்றார் ?

(A) 1839 (B) 1893 (C) 1983 (D) 1899

7. வன்முறையற்ற வாழ்க்கை எப்போது சாத்தியம் ?

(A) நன்றாகப் படித்தால் (B) கீழ்ப்படிந்து நடப்பதால்

(C) வகுப்பறைக்குள் கிடப்பதால் (D) சிந்தித்துச் செயல்பட்டால்

8. காளையர் கோவிலைச் சுற்றி __________ உள்ளது.

(A) குளம் (B) மலை (C) கோட்டை (D) காடு

9. முத்தாச்சிக்கிழவி யாரைப் பார்த்து பயந்தாள் ?

(A) மகளைப் பார்த்து (B) மிருகத்தைப் பார்த்து

(C) சங்குத் தேவனைப் பார்த்து (D) இருட்டைப் பார்த்து

10. வங்கிப் பணம் எடுக்கும் படிவத்தில் முதற் பக்கத்திலுள்ள Entered, Folio என்னும் இடங்களை :

(A) நிறைவு செய்வது தேவையற்றது

(B) வாடிக்கையாளர் நிறைவு செய்வார்

(C) வங்கி அலுவலர் நிறைவு செய்வார்

(D) குறுக்குக் கோடிட்டு அடித்துவிட வேண்டும்

11. அடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு :

(A) சடசட (B) கலகல (C) அக்கம் பக்கம் (D) தீ! தீ! தீ!

12. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

ஒரு குறிக்கோளைச் சுவைபடச் சொல்வது இலக்கியம். ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு குறிக்கோளை வலியுறுத்துகிறது. இலக்கியம் வாழ்வின் கண்ணாடி, வாழ்வுக்கு வழி காட்டுகிறது. இலக்கியம் என்பது வெறும் சொற்களால் ஆன சொல்லோவியம் அன்று, வாழ்வின் உண்மைகளை விளக்கித் தந்நு மக்களுக்குக் கலங்கரை விளக்கம் போன்று வழிகாட்டுவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே என்று நன்னூலார் கூறுகின்றார். கம்பராமாயணமும், வில்லிபாரதமும் சிறந்த இலக்கியங்களாகும். சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும், பத்தினிப் பெண்களை உலகம் புகழும், ஊழ்வினைப் உறுத்து வந்து ஊட்டும் என்ற மூன்று குறிக்கோள்களை இயம்புகிறது. இராமாயணம் தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை; தந்தை சொல் மிக்கதொரு மந்திரமில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது, வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த ஒரே மொழி தமிழ் மொழி ஆகும்.

**வினாக்கள் :**

| | | |
|---|---|---|
| (1) | சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை? | **3** |
| (2) | இலக்கியம் வெறும் சொற்களால் ஆன ________ அன்று. | **1** |
| (3) | வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த ஒரே மொழி எது? | **1** |
| (4) | நூற்பயன் யாது? | **2** |
| (5) | இராமாயணம் உணர்த்தும் கருத்துகள் யாவை? | **3** |
| (6) | இலக்கியங்களின் நோக்கம் யாது? | **2** |

13. பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
    வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப் பெருக்கும்
    கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
    விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகொண்டார்
    இங்கமரர் சிறப்புக் கண்டார்.

**வினாக்கள் :**

(1) எப்போது வாக்கினில் உண்மையொளி உண்டாகும்? **1**

(2) பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் முன்னேற கவிஞர் கூறும் வழி யாது? **2**

(3) அமரர் சிறப்புக் கண்டார் யார்? **2**

(4) கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் எதனைப் போல் பெருக வேண்டும் என்கிறார்? **1**

**14.** செந்தமிழ்நாடு என்ற கூற்றைக் கேட்கும் நிலை எப்படி உள்ளது? **1**

**15.** குறுந்தொகையில் இடம் பெற்ற பாடல்களின் எண்ணிக்கையை எழுதுக. **1**

**16.** நானோ செகண்டு என்பது யாது? **1**

**17.** புருசனைத் திருத்த அஞ்சம்மா என்ன செய்தாள்? **1**

**18.** தமிழில் மொழி பெயர்க்க. **1**

(A) Automation

(B) Capacitor

**19.** (A) சேர்த்து எழுதுக. **4x½=2**

(i) முகம் + அத்து + இரண்டு

(ii) வினை + உலப்ப

(iii) பழி + ஆய

(iv) பாம்பு + இன் + அ

(B) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு சொற்களை எழுதுக. 2

(i) கரை

(ii) தை

(C) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. 2

(i) கற்றவன் சிறப்பை __________ அறியமாட்டான்.

(ii) அவன் பணத்தால் ஏழை, ஆனால் மனத்தால் __________ .

(D) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. 2

(i) பாதரட்சை

(ii) விழுமை

(iii) இமையோர்

(iv) விசும்பு

**20.** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) தலைமறைவு

(2) தலை முழுகுதல்

**21.** தடம் எண் மற்றும் புறப்படும் நேரம் எதைப் பார்த்துக் குறிக்க வேண்டும்? 1

**22.** உனது பகுதியில் நடைபெற்ற ‘இலவச மருத்துவ முகாம்’ குறித்து ஒரு பத்தியில் குறிப்புரை எழுதுக. 4

**23.** தமிழின் பெருமைகளைப் பாரதிதாசன் எவ்வாறு சித்திரித்துக் காட்டுகின்றார்? 5

**24.** வீட்டைச் சுற்றி நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் துறை விடுக்கும் அறிவிப்பினை எழுதுக. 5

**அல்லது**

நடைபெறவுள்ள ‘புத்தகத் திருவிழா (புத்தகக் கண்காட்சி) குறித்த விளம்பர அறிவிப்பினை எழுதுக.

**25.** (A) வலை-வளை பொருள் வேறுபாடு கூறி தொடரில் அமைத்து எழுதுக. 2

(B) முக்காரமிடுதல்-கனைத்தல் என்னும் ஒலிகள் எவ்விலங்குகளுக்குரியவை? 2

**26.** உமது பள்ளி 'விளையாட்டுக் குழுமம்' நடத்தும் போட்டிகள் குறித்த செய்திகளை அறிவிப்புப் பலகையில் இடம் பெறுமாறு அட்டவணை தயாரிக்க. **5**

**அல்லது**

தொடர்வண்டியில் பயணம் செய்வதற்கான முன் பதிவு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. [48, முருகன் தெரு, மதுரையில் வசிக்கும் நீ உன் சகோதரியுடன் 28.10.2014 அன்று தில்லி நிசாமுதீன் வருவதற்கு இரண்டாம் வகுப்பில் பாண்டியன் விரைவுத் தொடர் வண்டியில் பயணம் செய்வதற்கு ஏற்றவாறு இவ்விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. உனது பெயர் இராஜன் என்றும் வண்டி எண் : 2763 என்றும் கொள்க]

| | | |
|---|---|---|
| | | வகுப்பு : (அ)................ |
| வண்டி எண்/வண்டியின் பெயர் : (ஆ)................ | | தேதி : (இ)................ |
| படுக்கை (எண்ணிக்கை) : (ஈ).... | புறப்படும் இடம் : (உ) .... | சேருமிடம் : (ஊ)..... |

| வ.எண். | பெயர் (பதினைந்து எழுத்துகளுக்கு மிகாமல்) | பால் ஆ/பெ | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

விண்ணப்பதாரர் பெயர் - முகவரி.....................................................
..............................................................................................................
..............................................................................................................

கையொப்பம்
.............................

**27.** கணினியின் சிறப்பியல்புகளைத் தெளிவாக விளக்கவும். **5**

**அல்லது**

நம் நாட்டின் பாதுகாப்பு வலிமைகள் பற்றி அப்துல்கலாம் குறிப்பிடுபவை யாவை?

**28.** பிழை திருத்தம் செய்க. **5**

(1) இரை பணிக்கு வந்தவர் பலியானாற்.

(2) ஆளம் தெறியாமல் காளை விடாதே.

(3) பகுத்துன்டு பள்ளுயிற் ஓம்புக.

(4) நாளை காளை அம்மா வருவார்.

(5) நானும் முருகனும் கோவிளுக்குச் சென்றனர்.

29. குடிநீர் வசதி கோரி குடிநீர் வாரியத் தலைவருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக. **7**

**அல்லது**

தேர்வில் மாநில அளவில் முதன்மை பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

30. ஏதேனும் ஒரு தலைப்பில் நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. **5**

(1) தருமம் தலை காக்கும்

(2) சிறு துளி பெரு வெள்ளம்

(3) எண்ணியவெல்லாம் உயர்வுள்ளல்

31. ஏதேனும் **ஒரு** தலைப்பில் **இருநூறு** சொற்களுக்குக் **குறையாமல்** கட்டுரை எழுதுக. **10**

(1) ஊக்கம் உடையவர் உயர்வடைவர்

(2) அறிவியலின் பயன்கள்

(3) நான் விரும்பும் நூல்

**- o O o -**